# பொதுக்காலத்தின் 6 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம் 17: 5-8,

திபா 1: 1-2. 3. 4-6,

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய

முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 15: 45-49,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 6: 17, 20-26

## திருப்பலி முன்னுரை:

ஆண்டவரைத் தேடுவோருக்கு எந்த நன்மையும் குறைவுபடாது. ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர்:

திருமகன் இயேசுவின் அன்பு நிறை உடன்பிறப்புகளே உங்கள் அனைவருக்கும் என் இனிய (காலை.'.மாலை) வணக்கங்களும் வாழ்த்தும். இன்று நாம் பொதுக்காலத்தின் ஆறாம் ஞாயிறு தினத்தைக் கொண்டாடுகின்றோம். இன்றைய அருள்வாக்கு வழியாக நம் இறைவன் நம்மைப் பலப்படுத்துகின்றார். ஆண்டவரைத் தேடுவோருக்கு எந்த நன்மையும் குறைவுபடாது. ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர்: என்னும் விசுவாச உண்மைகள் மாபெரும் கொடையாக நமக்குக் கொடுக்கப்படுகின்றன. உண்மையான மகிழ்ச்சியும், விடுதலையும் யேசுவிடமிருந்தே வருகின்றன. உலக சக்திகளின் மீதும், ஆட்கள் மீதும், பொருட்கள் மீதும் நாம் வைக்கும் நம்பிக்கையும், இவைகளின் மீது நாம் கொள்ளும் கவர்ச்சியும்: சாபத்தையும், சாவையும், அழிவையும், தீமைகளையும் மாத்திரமே கொண்டுவரும் என்பதனை இன்றைய இறைவாக்குகள் அழுத்திக் கூறுகின்றன. எனவே முழு மனத்துடனும், முழு உள்ளத்துடனும் இறைவனையே தேடவும், அவரிலேயே முழு விசுவாசம் கொண்டு வாழவும் அருள் வரம் கேட்டுச் செபிப்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**துணிந்துச் செல். நான் உன்னோடு இருக்கிறேன் என்றுரைத்த எம் இறைவா!**

திருத்தந்தை முதல் பொதுநிலையினர் வரை அனைவரும் உமது அழைப்பை ஏற்றுத் துணிவுடன் இவ்வுலக மக்கள் அனைவருக்கும் உமது அருள்வாக்கை எடுத்துரைக்கவும், வாழ்ந்துக் காட்டிடவும் வேண்டிய வரங்களை வழங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

இன்றைய உமது அருள்வாக்கு வழியாக நீர் வெளிப்படுத்தும் உமது விருப்பத்தையும் , சித்தத்தையும் நாம் சரியான விதத்திலே புரிந்து கொண்டு, முழு மனத்துடனும், முழு உள்ளத்துடனும் உம்மையே ஆர்வமுடன் தேடவும், உம்மிலேயே முழு விசுவாசம் கொண்டு வாழவும், உமது விருப்பப்படி நடக்கவும் வேண்டிய ஞானத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எம்மை கைப் பிடித்து நடத்தும் தந்தையே! எம் இறைவா!**

இன்று உலக நாடு முழுமையும் அடக்குமுறையாலும், அநீதிகளாலும், நோயினாலும், கவலையினாலும் அல்லலுறும் அனைத்து மக்கள்மீதும் மனமிரங்கி அவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்கள் அனைவரும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழவும்: உலகிலே அடக்குமுறைகள் அழிந்து: அன்பும், மனிதநேயமும், நீதியும் நிலைபெறச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விடுதலையின் நிறைவே இறைவா,**

பலவிதமான உடல், உள்ள, ஆன்ம நோய்களால் வருந்தும் மக்களை கனிவுடன் கண்ணோக்கி, அவர்களுக்குத் தேவையான நற்சுகமும், புதுவாழ்வும் அளித்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

நீர் எமக்குக் கொடுத்துள்ள குடும்பம் என்னும் தோழமை உறவுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். கணவன், மனைவி, பிள்ளைகள் அனைவரும் உம்மையே தேடி நேசிப்பதிலும் , உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும், இறையுறவிலும், சமூக உறவிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும், சிறந்து விளங்கி உமக்குகந்த குடும்பங்களாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எமக்கு மன்னிப்பு அளித்து எமக்கு புதுவாழ்வை வாக்களித்த தந்தையே இறைவா!**

எம் இளைய சமுதாயம் தனது வாலிப நாட்களில் நீர் தரும் நலன்களை கண்டுக் கொண்டு அதனை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள தூயஆவியானவரின் அருங்கொடைகளை அபரிமிதமாகப் பொழிந்தருளவேண்டும் என்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

www.tamilcatholicnews.com